IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

CCNO. 27/2023

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | BEERBASHA |
| HUSBAND NAME | : | MADHAR KHAN |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 27th day of April 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது மகன் ஆவார். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் 24.12.2021 அன்று எனது மகன் அலிம்கான் என்பவரும், எனது மனைவி சுபேதாபியும், புத்தரெட்டிபள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் சென்விட்டு திரும்பி வரும்போது சுமார் 09.00 மணியளவில் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், எனது மனைவிக்கு இடது பக்க தலையில் ரத்த காயம் ஏற்பட்டதாகவும், மருத்துவமனையில் சேர்த்தபோது சிகிச்சை பலனின்றி 03.01.2022 அன்று இறந்துவிட்டதாகவும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது மகன் என்பதால் அவருக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலிசார் கேட்டுகொண்டதன்பேரில் எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். கையெழுத்து என்னிடம் வாங்கியபோது தவிர வேறு சமயத்தில் வழக்கு சமபந்தமாக போலிசார் என்னை விசாணை செய்யவில்லை என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

CCNO. 27/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | SUBER |
| FATHER NAME | : | RASHID |
| VILLAGE | : | UPPARAPALLI |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 27th day of April 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா ஆவார். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் 24.12.2021 அன்று எனது அத்தையும், எனது அத்தை மகன் அலிம்கான் என்பவரும், புத்தரெட்டிபள்ளிக்கு இருசக்கர வாகனத்தில் சென்விட்டு திரும்பி வரும்போது சுமார் 09.00 மணியளவில் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், எனது அத்தை இறந்துவிட்டதாகவும், 04.01.2022 அன்று வேலூர் அரசு மருத்துவமனை சவகிடங்கில் எனது அத்தை சுபேதாபியின் பிரேத்ததின் மீது எனது முன்னிலையில் பிரேத விசாரணை செய்ததாகவும் தற்போது ஆஜர் எதிரிக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.

-